# திருவள்ளுவர் சுட்டும் நலம்தரும் உணர்வுகள்

**முனைவர் கி. காவேரி**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**ஶ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி**
**அண்ணா நகர் ,சென்னை-40**

2

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் சமூகத்தில் தன்னை எப்படி தகவமைத்துக் கொள்வது என்பதற்கு இணங்கவே தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும் வெளிப்படுத்தவும் அறிந்து கொள்கிறான். பல பண்பாட்டு விதிகளாலும் ஒழுக்க நெறிகளாலும் இயற்கை உள்ளுணர்வுகளாலும் இதனை கைக்கொள்ளப்பெறுகிறான். இதற்குத் திருக்குறள் பல்லாற்றானும் துணைநிற்கிறது.

**ஆய்வு நோக்கம்**

செம்மாந்த சமூகக் கட்டமைப்பு உருவாக்கத்தில் திருவள்ளுவர் சுட்டிய உணர்வுகள், திருக்குறளினூடாக மனதிலெழும் உணர்வுகள் இரண்டும் முதன்மை பங்காற்றுகின்றன. வாழ்வியல் உயர்வுக்காக வள்ளுவர் வகுத்த நெறிகள் ஆளுமைக் குறைபாடற்ற சமூக உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமைவதை ஆய்ந்து நோக்குவது இக் கட்டுரையின் நோக்கம்.

**திறவுச் சொற்கள்**

உணர்வுகள், மெய்ப்பாடுகள், நிலைக்களன்கள், உளநலம், மானுட மேன்மை, பண்படுத்தல், செம்மை.

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்களில் பரந்து விரிந்த பொருண்மைகளின் காரணமாகத் தலைசிறந்து விளங்கும் நூல் திருக்குறள். எக்காலத்திற்கும் பொருந்தும் இலக்கியம் எனில் உடனடியாக நம் நினைவுக்கு வருவது இந்நூலேயாகும். கற்றனைத் தூறும் அறிவு என்பதற்கிணங்க கற்குந்தோறும் பல்வேறு நயங்களை, நலன்களை நல்கக் கூடியது. திருக்குறளில் இல்லாதன இல்லையென்று உறுதியாகக் கூறலாம். அவ்வகையில் இந்நூலில் வெளிப்பட்டுள்ள பல்வேறு பொருண்மைகளுள் உணர்வுகள் தனியிடம் வகிக்கின்றன. கலையின் நோக்கங்களுள் ஒன்று உணர்ச்சி வெளிப்பாடு.

உணர்ச்சிகள் இல்லாமல் இலக்கியங்கள் இல்லை. திருக்குறளை ஆழ்ந்து வாசிக்கையில் சில உணர்வுகள் நம்முள் உள்ளோடி செயல்படுவதை அவதானிக்க முடியும்.

**உணர்வு – உணர்ச்சி - மெய்ப்பாடு**

வள்ளுவர் வகுத்த வாழ்வியல் நெறிகள் உணர்வுகளோடு இயைந்து மனித குலமனைத்திற்கும் உயரிய வழிகாட்டலாக அமைந்திருக்கின்றன. மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவனது உணர்வுகளும் செயல்களும் காரணிகள் என்பதை மிக இயல்பாக உணர்த்திச் செல்வதில் திருக்குறள் தலையாய இடத்தை வகிக்கிறது. மனிதனின் புறச் செயல்கள் பிறரால் நோக்கப்படுவன; ஆனால் அக உணர்வுகளை எவராலும் காணவியலாது. உள்ளத்தில் தோன்றும் உணர்வானது சொல்லாகவோ அல்லது உடல் மொழியாகிய செயலாகவோ சிலவிடத்து வெளிப்படலாம். இதனை உணர்ச்சி என்பர்; அவ்வேளையில் அவனின் உணர்வுகளை அவதானிக்க முடியும். இதனை மெய்யின்கண் படுதலால் மெய்ப்பாடு[1] என்கிறார் வெள்ளைவாரணர். நகை முதலா உவகை ஈறாக எண் வகை மெய்ப்பாடுகளுக்கும் அகத்தே எழும் உணர்வுகள் அடிப்படையாகி அவை புறத்தே புலப்பட நிலைக்களன்கள் ஏதுவாகின்றன.

**நலம்தரும் உணர்வுகள்**

நலம் பெறுவதற்கான நன்னெறிகளாக வள்ளுவர் சுட்டும் வாழ்வியல் கூறுகள் எண்ணற்றவையாகத் திருக்குறளில் விரவி இருக்கின்றன. எல்லாவற்றையும் நோக்குவது கட்டுரைக்கான எல்லையைக் கடக்கச் செய்துவிடும் என்பதால் கல்வி, ஈகை, தவம், கடவுள் வாழ்த்து, அன்புடைமை, பண்புடைமை, அடக்கமுடைமை என்னும் அதிகாரங்களை மட்டும் தேர்ந்து அவற்றில் சுட்டப்பட்டுள்ள உணர்வுகள் குறித்தும் அவற்றின் தாக்கத்தால் ஏற்படும் உணர்வுகள் குறித்தும் காணலாம். இவை மனிதனுக்கு நலம் தரும் உணர்வுகளை ஏற்படுத்தும் வல்லமை வாய்ந்தன.

**பெருமித உணர்வு**

தமிழர்களின் முதன்மைக் குணமாகக் கருதப்படுவது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல். இது அளிக்கும் பெருமித உணர்விற்கு அளவில்லை. பொருளினிடத்தில் பற்றுக் கொண்டு மற்றவர்களுக்குக் கொடுத்து உதவாத தன்மை மிகப்பெரும் குற்றம்(438) என்றுரைப்பதின் ஊடாக ஈகையின் மேன்மையை எடுத்துரைக்கின்றார். ஈகை என்பது இல்லாதவர்க்குக் கொடுப்பது(221) மட்டுமன்று; எந்தப் பலனையும் எதிர்பாராது கொடுப்பதும் ஆகும். இவ்விடத்து புறநானூற்றின்

*இம்மை செய்தது மறுமைக்கு ஆமெனும்*

*அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்.....*[2]

எனும் பாடல் ஈண்டு நோக்கற்குரியது. அரசன் ஆய் கொடையை விற்கும் வணிகன் அல்லன்; சான்றோர் காட்டிய நெறி என்று பிறருக்குக் கொடை அளித்து வருபவன் என ஏணிச்சேரி முடமோசியார் உரைத்துள்ளார். நம் சான்றோர்கள் கொடை என்பது எதனையும் எதிர்பாராததாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளமையை அறியலாம். தன் முயற்சியின் மூலமாக ஈட்டிய உடைமைப் பொருளைக் கொடுப்பதின் ஊடாகத்தான் இந்த இன்புறலை அடையவியலும்.

பெருமிதத்திற்கான நிலைக்களன்களாகக் கல்வி, தறுகண், புகழ், கொடை நான்கினைக் குறிப்பிடுவார் தொல்காப்பியர்.[3] சென்ற இடமெல்லாம் நமக்குச் சிறப்பினைத் தேடித் தருவது கல்வி. ஒருவன் கற்கும் கல்வி அவனுக்கு மட்டுமல்ல அவனைச் சுற்றியுள்ளோருக்கும் பெருமிதத்தைப் பெற்றுத் தரவல்லது. தாய் தன் மகனை ஈன்ற பொழுதைவிட பிறர் அவனைச் சான்றோன் எனக் கூறுவதைக் கேட்கையில் குறள் (குறள் 60) பெருமிதம் அடைவாள். அக்கல்வி சமூகத்திற்குப் பயன்படும் எனில் அதைவிட மேலானது எதுவுமில்லை.

**தமிழ் வளமும், உளநலமும்**

பொன்னானது நெருப்பில் சுடச்சுட ஒளிர்வதைப் போல் தவம் செய்பவரைத் துன்பம் வருத்த வருத்த மெய்யுணர்வு மிகும் (குறள் 267) என்பதைக் காண்கையில், துன்பத்தைக் கண்டு துவளாத நெஞ்சுரத்தின் வாயிலாகவே உறுதியையும் பக்குவத்தையும் அதன் தொடர்ச்சியாக உயர்வையும் பெறமுடியும் என்பதை உணர முடிகிறது. இன்றைய தலைமுறையினரில் குழந்தைப் பருவத்திலிருந்து எதுவும் எளிதில் கிடைத்துவிடும் சூழலில் வளரும் பிள்ளைகள் வாழ்க்கை ஓட்டத்தில் சிறு தோல்விகளைக்கூட தாங்க இயலாதவர்களாக இருக்கின்றனர். ஏமாற்றங்கள், வலிகளைக் கடக்கக் கற்கும் பிள்ளைகள் எச்சூழலையும் எளிதில் சமாளிக்கும் ஆற்றல் பெறுவர். நமக்கு ஏற்படும் இன்னல்களால் சோர்வுறாது அவற்றை அனுபவப் பாடங்களாகக் கொண்டால் தடைகளைத் தகர்த்து வெற்றியை எளிதில் எட்டலாம் என்பதற்கான நம்பிக்கை விதையை நம்முள் ஊன்றி தன்னம்பிக்கை கீற்றொன்று மனதிலெழ பல குறட்பாக்கள் துணைநிற்கின்றன.

இன்றைய மனிதனின் வாழ்க்கை பல நேரங்களில் துயரத்தையும் ஏக்கங்களையும் ஏமாற்றங்களையும் இன்னல்களையும் கொண்டதாகவே அமைந்துள்ளது. இதற்குக் காரணம்

மனிதனின் தேவை; தேடல் நீண்டுகொண்டே இருப்பதேயாகும். இத்தகு நிலையை மாற்றிட, இறைவன் அடியைச் சேர்ந்தார்க்கு எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் இல்லை என்கிறார் வள்ளுவர்(குறள் 4). ஏனெனில் பற்றற்றானைப் பற்றியவர்கள் ஐம்புலன்களை நெறிப்படுத்தி அறவழியில் செலுத்துவதன் மூலம் மனம், மொழி, மெய்யைக் கட்டுப்படுத்துவதோடு உயிர்களிடத்துக் கருணையுடன் இருத்தல் முதலானவற்றை வாழ்வில் மேற்கொள்வர். இதனால் இவர்களின் சிந்தையிலும், செயலிலும் எத்தகு தீமைகளும் இராது. அவ்வாறு இருக்கையில் மனநலமும் சிறக்கும். தமிழ் வளமும், உளநலமும் இணைந்தேயான இதுபோன்ற கருத்துகள் பல்வேறு உளவியல், ஒழுக்கவியல் சிக்கல்களுக்குத் தீர்வளிக்கத் தக்கனவாக உள்ளன.

**தன்னிலை மாறா தகைமையுணர்வு**

தமிழ் இனம் தனக்கெனப் பல்வேறு தனித்தன்மைகளைக் கொண்டது எனினும் இன்றைய வாழ்க்கைச் சூழலில் மனித சமுதாயம் அறவழியில் இருந்து விலகி அறமற்றவற்றைச் செய்து கொண்டிருக்கக் கூடிய நிலையில் அவனைப் பண்படுத்தும் தன்மை கொண்டதாகத் திகழ்கிறது திருக்குறள். நாம் எத்தகு உயரிய நிலையை எய்தினும் எப்பொழுதும் எளியோராய் திகழ வேண்டும்.(குறள் 991) அறிய வேண்டியவற்றை அறிந்து, உறுதியான உள்ளமும், ஆரவாரமற்ற அடக்கத்துடன் வாழ்தல் வேண்டும்.(குறள்123, 124) சான்றாண்மை - நற்குணங்களுக்கு வித்து. (குறள் 981) மகிழ்ச்சியால் செருக்குறுகையில், அக்காரணத்தால் அழிந்தவரை நினைத்தல் வேண்டும்.(குறள் 539) முதலான குறட்பாக்கள் மனிதனுக்கு இருக்க வேண்டிய குண நலன்கள், அடக்கம், நடுநிலைமைத் தன்மையை முன்னிறுத்துகின்றன. இதனை உணரும் மனித மனம் எக்கணத்திலும் தலைகனத்துடன் இருக்கத் துணியாது.

**மானுடத்தின் மகத்துவம்**

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது[4] – இதன் மகத்துவத்தை உணர்ந்து, பிறர்க்குப் பயனாகும்படி வாழ்வை அமைத்துக் கொண்டால் அதைக்காட்டிலும் இவ்வுலகில் வேறு பேறு என்ன இருக்க முடியும். நல்லனவற்றைச் செய்தல் வேண்டும் அவற்றையும் இப்பொழுதே செய்திடல் நலம்பயக்கும் என்கின்றன இலக்கியங்கள். ஏனெனில் புல் மீதான பனித்துளி போன்ற நிலையாமையை உடையது வாழ்க்கை.

*....மற்றறிவாம் நல்வினை யாம்இளையோம் என்னாது*

*கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம்செய்ம்மின்*[5]

திருக்குறள் மட்டுமன்று பிற அறநூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், தனிப்பாடல்கள் கூறுவனவற்றை நோக்குகையில் நிலையாமைத் தத்துவங்கள் நிதரிசனங்களாக நம்முன் நிற்கின்றன.

வள்ளுவர் நேரிடையாகச் சிலவற்றை வலியுறுத்துவது போலவே நம் வாழ்வில் தவிர்க்க வேண்டிய பலவற்றையும் முன்னிறுத்தியுள்ளார். சான்றாக, கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல், பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையெச்சம் முதலானவற்றைக் குறிப்பிடலாம். இவை மனதில் ஆழமாக வேறூன்றுவதன் ஊடாக உணர்வு கொந்தளிப்பின்றி அமைதியான மனப்பக்குவத்தைப் அடைய முடியும். பண்பட்ட சமூக உருவாக்கத்தில் இவற்றிற்கு முக்கிய பங்குண்டு. இதேபோல் பொறையுடைமை அதிகாரம் எச்சூழலிலும் மனிதன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான அடிப்படை. பொறுமையின்மை ஒருவரின் ஆளுமைக் குறைபாட்டை வெளிப்படுத்தும் என்கிறார் ப்ராய்டு. மன்னிக்கும் மனப்பாங்கை மேம்பட்ட உள்ளச் செயல்பாடாக இவர் குறிப்பிடுகிறார். ஒருவர் நிறைவுடைமை அல்லது நற்பண்பில் முழுமை பெறுதலை அடைய வேண்டுமெனில் பொறுமையைப் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும். சினமாகிய குணத்தைக் கட்டுப்படுத்துவதால் மட்டுமே இது சாத்தியப்படும். இப்பக்குவத்தை அளிக்கவல்லது திருக்குறள். சமூகப் படிமலர்ச்சியில் திருக்குறள் மனித மனதைப் பண்படுத்தி செம்மைப்படுத்துவதில் தனித்து இலங்குகிறது.

**முடிவுரை**

மனதில் எழும் உணர்வுகளும் எண்ணங்களும் மனித இயல்பை தீர்மானிக்கின்றன. மனிதனின் மனம் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறதோ அதற்கிணங்கவே அவன் உணர்வுகள் உருவாகின்றன. உணர்வுகளுக்கு ஏற்பவே அவனது ஒழுகலாறுகள் அமைகின்றன. மனம் செம்மையுற மனிதனுக்கு அடிப்படை அவனது உணர்வுகள். *மனமது செம்மையானால் மந்திரமும் செபிக்க வேண்டாம்* என்னும் அகத்தியரின் கூற்று ஈண்டு நோக்கற்குரியது. திருக்குறள் நம் வாழ்வியலை உறுதிப்படுத்தும்; நெறிப்படுத்தும்; நல்வழிப்படுத்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. திருக்குறள் பெருமையும், வளப்பமும் கொண்ட நூல் மட்டுமன்று; ஊன்றிப் படிப்பார்க்கு உளநலமும் அளிக்கும் நூல். ஆக்கமும் ஊக்கமும் நல்கி அறிவும் செறிவும்

ஊட்டுவதன் மூலம், செறிவார்ந்த சமூக வளர்ச்சிக்கு வித்திடுவதோடு புதிய கருத்தியல்களுக்கு நம்மை முன்னகர்த்தும் செறிந்த இலக்கியம்.

**அடிக்குறிப்புகள்**

1. மெய்ப்பாட்டியல் – இயல் அறிமுகம்.
2. புறநானூறு 134
3. மெய்ப்பாட்டியல் நூற்பா 9
4. ஔவையார் தனிப்பாடல்கள்
5. நாலடியார் பா.19

**துணைநூல்கள்**


1. இராமநாதன் அரு. (ப.ஆ.) அகத்தியர் பாடல், பிரேமா பிரசுரம், சென்னை 24, (ஐந்தாம் பதிப்பு 1986)
2. கௌமாரீஸ்வரி(ப.ஆ.) ஔவையார் தனிப்பாடல்கள், மங்கை வெளியீடு, சென்னை - 18.(மு.ப. டிச.2010)
3. கி. நாகராஜன், கல்வி உளவியல், ஸ்ரீராம் பதிப்பகம், விவேகானந்தா தெரு, சாலிகிராமம்
4. சண்முகம் பிள்ளை மோ. திருக்குறள் அமைப்பும் முறையும், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.
5. திருக்குறள், பரிமேலழகர் உரை, வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை – 17(மு.ப. 1986).
6. தொல்காப்பியம், பொருள், நச்சினார்க்கினியர் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி - 6 (மறுபதிப்பு மே, 1968)
7. மதுரை முதலியார் கு. நாலடியார் விளக்கவுரை, பாரிநிலையம், (மு.ப.1966)
8. வெள்ளைவாரணன் க. மெய்ப்பாட்டியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.